Koviloor Digital Library
3-2

உ

திருச்சிற்றம்பலம்

வெளியீடு எண் : 17

விநாயகர் வழிபாடு

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 12774



விநாயகர் சதுர்த்தி வெளியீடு

18.9.2004

பொருள் உதவும் புண்ணியர் :

அருள் நெறிச் செம்மல்

திரு. S.ஆவுடையப்ப பிள்ளை,

திருநகர்.

வெளியிடுவோர்:

திருக்கயிலாய பரம்பரை

சைவ ஆதீனங்களின் சீடர் குழு,

திருநகர், மதுரை 625 006.

ACCNO:12774

42 4173

Koviloor Digital Library

பதிப்புரை

அன்புடையீர் வணக்கம்,

எம் மன்ற உறுப்பினரும், திருநகர், திருக்கயிலாய பரம்பரை சைவ ஆதீனங்களின் சீடர் குழு உறுப்பினருமாகிய அருள்நெறிச் செம்மல் திரு.**S.ஆவுடையப்ப பிள்ளை** அவர்கள் மன்றப் பணிகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர். விநாயகர் சதுர்த்தி அன்று நல்ல நூல் ஒன்றை வெளியிட வேண்டுமென்ற கொள்கையோடு பல ஆண்டுகளாக நூல் பதிப்புப் பணியைச் செய்து வருகின்றவர். இந்த ஆண்டும் விநாயகர் வழிபாட்டின் சிறப்புக்களையும், திருமுறைகளில் விநாயகர் இடம் பெறும் பாடல்களையும் தொகுத்து **'விநாயகர் வழிபாடு'** என்ற இந்நூலை வெளியிடுகிறார். அவரும் அவரது குடும்பத்தினரும் எல்லா நலன்களும் பெற்றுப் பல்லாண்டுகள் பணி செய்து வாழ்ந்திட ஆலவாயண்ணலை வேண்டி அமைகிறேன். அன்பர்கள் நூலினைப் பெற்றுப் பயன் பெறுக.

அன்பன்,

நீ.சி. சுந்தரராமன்,
(கூடல் சுந்தரன்)
செயலர்,
பன்னிரு திருமுறை மன்றம்.

அமைப்பாளர்,
திருக்கயிலாய பரம்பரை
சைவ ஆதீனங்களின்
சீடர் குழு, திருநகர்.

Koviloor Digital Library
KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
A. No. 12774
3-2

உ

வினை தீர்க்கும் விநாயகர்

எந்தக் காரியம் செய்தாலும் அது விக்னமில்லாமல் நன்றாக நடைபெற விநாயகர் அருள் வேண்டும். அதனால் முதலில் நினைத்துப் பூஜிக்க வேண்டியது அவரைத்தான். மனிதர்களாகட்டும் முனிவர்களாகட்டும் அல்லது தேவர்களே ஆகட்டும் முதல் பூஜை இவருக்குச் செய்துவிட்டுத்தான் எதையும் ஆரம்பிக்கிறார்கள்.

திரிபுர அசுரர்களை அழிக்கப் புறப்பட்ட சிவபெருமான் இவரை பூஜை செய்யாததால் தேரின் அச்சு முறிந்தது. அவர் விநாயகரை வழிபட்டபின் திரிபுர தகனம் செய்ய முடிந்தது. இந்த அச்சு முறிந்த இடம் செங்கற்பட்டு மாவட்டத்தில் அச்சிறுபாக்கமாக விளங்குகிறது.

பண்டாசுரனை வதம் செய்யப் புறப்பட்ட அம்பிகையை அசுரனால் ஸ்தாபிதம் செய்யப்பட்ட விக்ன யந்திரம் தடை செய்தது. இதை நிவர்த்திக்கும்படி தேவி விநாயகரைக் கேட்டுக் கொண்டதன் பேரில் அந்த யந்திரத்தைப் பொடியாக்கி தேவிக்கு பண்டாசுரனை வதம் செய்ய உதவி புரிந்தார். சூரியன் தன் ஒளி குறையாமலிருக்க கணேசரை ஆராதித்து எப்போதும் தென் மண்டலத்தில் கணேசரை அர்க்க கணபதி ரூபத்தில் ஆராதிக்கிறார்.

கணபதியின் சகாயத்தினால்தான் சுப்பிரமணியர் வள்ளியை மணம் முடிக்க முடிந்தது. இப்படி உதவி செய்த விநாயகரை ஆபத்சகாய விநாயகர் என்ற பெயரில் திருத்தணி மலை மீது தரிசிக்கலாம்.

இவருக்கு மேல் நாயகன் இல்லை

வி+நாயகன் என்றால் தனக்கு மேல் தன்னை நடத்துவிக்கும் நாயகர் இல்லாதவர் என்று அர்த்தம். விநாயகருடைய அஷ்டோத்திர சத நாமங்களுள் அநீஸ்வராய நம: என்பது இதையே குறிக்கிறது. அநாயக ஏக நாயகம் என்று ஆதி சங்கரர் குறிப்பிடுவதும் இந்த விநாயகர் நாமத்தைத்தான். சிவஞான சுவாமிகள் தான் இயற்றிய

Koviloor Digital Library

பிள்ளைத் தமிழில்,

"ஏர்கொண்ட தன்னைத் தளைப்பவரும்
ஊருனரும் இலரென்பது உலகு தேறற்கு
எடுத்த வெம்பாசமோடங்கு சந்தன் கரத்தேந்தி
மததாரை சிதறிப் பார் கொண்ட எண்திசைத்
தறுகட களிற்றுப் படல் பனிப்ப சேவிக்காலழி
பகிரண்டமுற்றும் புகுந்துலாய் கலைசையிற்
பதியுமோர் களிறு" – என்று அழகாகக் கூறுகிறார்.

பாசமும் அங்குசமும் யானையை அடக்கி ஆளும் பாகனிடம் இருக்கும். ஆனால் கணபதி என்ற யானையே இவைகளை வைத்துக் கொண்டிருக்கிறது. இந்த யானையை அடக்கும் பாகன் இல்லை. இவர்தான் உயிர்களான யானையை நடத்துகிறார்.

விநாயகரின் 21 திருப்பெயர்கள்

1. கணஞ்ஜய	–	எதிரிகளைக் கூட்டமாகவே நிர்மூலமாக்குபவர்.
2. கணபதி	–	கணங்களுக்குப் பதி
3. ஹேரம்ப	–	அளவிட முடியாத பராக்கிரமம் நிறைந்தவர்
4. தரணீதர	–	பூமியைத் தாங்குபவர்.
5. மகா கணபதி	–	மிகப்பெரிய படைகளுக்கும் தலைமை தாங்கிக் காப்பாற்றுபவர்.
6. லக்ஷப்ரத	–	லக்ஷ்யங்களை நிறைவேற வைப்பவர்
7. க்ஷிப்ரஸாதன	–	தாமதமின்றி அருள் புரிபவர்
8. அமோக ஸித்தி	–	அமோகமாக ஸித்தியை அருள்பவர்.
9. அமித	–	அளவிடப்படாதவர். அணுவுக்குள் அணு. மகத்துக்கு மகம்.
10. மந்த்ர	–	பலவித மந்திர ஸ்வரூபமாக உள்ளவர்.
11. சிந்தாமணி	–	கேட்கும் வரங்களை எல்லாம் தருபவர். வஸுந்த்ரா என்ற மனைவியுடன் கூடிய

Koviloor Digital Library 3-2

		சங்க நிதி, வஸுமதி என்ற மனைவியுடன் கூடிய பத்மநிதி இருபுறம் உள்ளனர்.
12. நிதி :	–	மஹாபத்மம், பத்மம், சங்கம், மகரம், கல்பம், முகுந்தம், நீலம், கர்வம், அற்புதம் என்ற ஒன்பது நிதிகளின் வடிவமானவர்.
13. மங்கல	–	ஸுமங்கலா எனப்படும் பிராண சக்தியால் இயங்கும் பீடத்திற்கு சகல மங்களங்களையும் செய்பவர்.
14. பீஜம்	–	அக்ஷர ரூபமாக இருந்து அருள்பவர்.
15. ஆசாபூரக	–	தன் புகழால் திக்கு எங்கும் வியாபிக்கப்பட்டவர்.
16. வரத	–	விரும்பும் வரங்களைத் தருபவர்.
17. சிவ	–	சிவஸ்வரூபமாகவே உள்ளவர்.
18. காச்யப சுத	–	காச்யபரின் மகனாக அவதரித்தவர்
19. நந்தன	–	எல்லாவித இன்பங்களுக்கும் சிறப்புக் – களுக்கும் காரணமானவர்
20. வாசாஸித்த	–	அடியார்களுக்கு பேசும் திறனை அளிப்பவர்
21. டுண்டி விநாயக	–	முக்தி பெற விரும்புபவர்களுக்கு தத்துவ விசாரத்தால் அறியத் தகுந்தவர்.

கணபதிக்கு 21 என்ற எண் விசேஷமானது. 21 பத்ரம், 21 புஷ்பம், 21 தூர்வாயுக்மம் (அருகம்புல்) 21 அதிரஸம், 21 பழம், 21 கொழுக்கட்டை (மோதகம்) இவ்விதம் எல்லாம் 21 ஆக இருக்க வேண்டும்.

காணாபத்தியர்களின் கைலாயம்

கணபதியையே முக்கியமாக வழிபடும் காணாபத்யர்களின் கைலாசம் மயூரேசம் என்ற தலமாகும். இது பூனா – பெங்களூர் புகைவண்டிப் பாதையில் ஜெஜுரி ரயில் நிலையத்திலிருந்து பத்து மைலில் உள்ளது. இங்கு ஸ்ரீ மகா கணபதி பூர்ண கலையுடன் கோயில் கொண்டிருக்கிறார். இத்தலம் கணபதி ஆராதனைக்கு விசேஷமாகக்

Koviloor Digital Library

கருதப்படுவதற்குக் காரணம் காணாபத்யர்களின் கைலாசமாக இது விளங்குவதுதான். இந்த கணபதிக்கு ஸ்வானந்தேசர் என்ற பெயர். இவர் சுயம்பு மூர்த்தி. பக்கத்தில் பஞ்சலோகத்திலான சித்தி, புத்தி தேவிகள் இருக்கிறார்கள். இந்த ஆலயத்தில் திசைக்கு ஒருவராக எட்டுக் கணபதிகள் (வக்ர துண்டர், ஏகதந்தர், மகோதரர், கஜானனர், லம்போதரர், விகடர், விக்னராஜர், தூம்ரவர்ணர்) இருக்கிறார்கள். இத்தலம் அஷ்ட கயா க்ஷேத்திரங்களில் ஒன்று. கோயிலை அடுத்து ஒடும் கராநதி ஓங்கார ரூபத்தில் அமைந்திருப்பது தனி விசேஷம்.

பம்பாயிலிருந்து 52 மைலில் டிட்வாலா என்ற ஒரு ஊர் இருக்கிறது. இது மிகப் புராதனமான ஆலயம். இங்கு கல்யாண விஷயமாகப் பிரார்த்தனை செய்து கொள்பவர்களுக்கு சீக்கிரமே கல்யாணம் நடைபெறுகிறதாம். ஆகவே இவர் கல்யாண கணபதி என்றே அழைக்கப்படுகிறார்.

அஷ்ட கணபதி க்ஷேத்திரங்கள்

மயூரேசம்	– ஸ்வானந்தேசர்;	ஹளபேடு	– நர்த்தன கணபதி;
காசி	– டுண்டி விநாயகர்;	பாலி	– வல்லாள கணபதி;
விஜயபுரி	– விக்னராஜர்;	தேவூர்	– பிரும்ம வரதர்;
மட்	– வரத விநாயகர்;	சித்தடேக்	– மதுகைடப வரதர்.

இந்த எட்டு க்ஷேத்திரங்களும் வடக்கிலேயுள்ளன. வடநாட்டில் சில இடங்களில் விநாயகர் சுப்பிரமணியரின் தம்பியாகக் கருதப்படுகிறார். நேபாளத்தில் பெண்கள் தங்களுக்குத் தகுந்த கணவன் கிடைப்பதற்காக செவ்வாய்க் கிழமைகளில் உபவாசம் இருந்து கணபதியை ஆராதிக்கும் வழக்கம் இருந்து வருகிறது.

மகா கணபதி உபாசனைக்கு 21 பத்திரங்கள் – முல்லை இலை, கரிசலாங்கண்ணி இலை, வில்வம், வெள்ளறுகம்புல் (வேரோடு கூடியது) இலந்தை இலை, ஊமத்தை இலை, வன்னி இலை, நாயுருவி இலை, கண்டங்கத்திரி இலை, அரளி இலை, எருக்கிலை, மருதை இலை, விஷ்ணுக்கிரந்தி இலை, மாதுள இலை, தேவதாரு இலை, மருவு, அரச

இலை, சாதி மல்லிகை இலை, தாழை இலை, அகத்திக்கீரை இலை, தவனம்.

விநாயக அநுக்கிரகத்தின் **21**விதமான பலன் :- தர்மம், பொருள், இன்பம், சௌபாக்கியம், கல்வி, பெருந்தன்மை, நல்வாழ்வுடன் கூடிய மோக்ஷம், முகத்தில் பால் வடியும் தன்மை, வீரலக்ஷ்மி கடாக்ஷம், விஜயலக்ஷ்மி கடாக்ஷம், எல்லாரும் த்ன்னிடம் அன்பாக இருக்கும் தன்மை, குடும்பத்தில் கர்ப்ப ரக்ஷை, மக்கட்பேறு, நுண்ணறிவு, நற்புகழ், சோகத்தினால் வாடாத தன்மை, அசுபங்களை அகற்றல், தன் வாக்குக்கு எதிர்வாக்கு அடங்கிப் போதல், கோபங் கொண்டவர்களை சாந்தப்படுத்தும் தன்மை, பிறர் ஏவும் ஆபிசாரம் அடக்குதல், துயர் தீர்த்தல்.

அருகம்புல் ஏன்?

விநாயகர் பூஜைக்கு அருகம்புல் (தூர்வை) மிகவும் ஏற்றது. விநாயகர் ஞானத்தீ. அருகம்புல்லும் மிக உஷ்ணமானது. அகலன் என்ற அசுரனை விழுங்கியபோது அவன் வயிற்றுள் சென்று தகித்தான். அதை சமனப்படுத்தவே அருகம்புல்லைத் தரிக்கிறார். தலையில் குட்டிக்கொள்வதும், தோப்புக்கரணம் போடுவதும் அவருக்கு மிகப் பிரியமானது.

பிள்ளையாருக்கு எதிரே நின்று தோப்புக்கரணம் போடுகிறோமே அதை நமக்கு எல்லாம் காட்டியவர் மஹாவிஷ்ணு. ஒருமுறை விஷ்ணுவினுடைய சக்கரத்தைப் பிடுங்கிக் கொண்டு அவரது மருமானான பிள்ளையார் தம் வாயில் போட்டுக் கொண்டு விட்டாராம். பிள்ளையாரிடம் இருந்து பிடுங்குவது என்றால் அது முடியாது. அவர் மிகவும் பலம் உடையவர். அதட்டி மிரட்டி வாங்கவும் முடியாது. ஆனால் அவரைச் சிரிக்க வைத்துச் சந்தோஷத்தில் அவர் வாயிலிருந்து சக்கரம் கீழே விழுந்தால் எடுத்துக்கொண்டு விடலாம் என்று மஹாவிஷ்ணுவுக்குத் தோன்றியதாம். உடனே நான்கு கைகளாலும் காதுகளைப் பிடித்துக்கொண்டு ஆடினாராம். விநாயகர் விழுந்து

Koviloor Digital Library

விழுந்து சிரித்தார். சக்கரம் கீழே விழுந்தது. விஷ்ணு எடுத்துக் கொண்டு விட்டார்.

குட்டிக் கொள்வதன் தாத்பர்யம்

நெற்றிப் பொட்டில் குட்டிக் கொள்வதால் அங்கேயுள்ள அமிர்த கலசத்தை எழுப்பி அந்த அமிர்தம், தேகம் பூராவும் பரவுகிறது. தோப்புக்கரணம் மூலாதாரத்திலுள்ள சுஷும்னா நாடியைத் தட்டி எழுப்புகிறது. இதனால் உடம்புக்குத் தெம்பும் மனதிற்குத் தெளிவும் ஏற்படுகிறது.

விநாயகர் வழிபாட்டின் பயன்

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள் நோக்குண்டாம் – ஔவையார். இவ்விநாயகரை வழிபட்டால் என்ன கிடைக்கும்? ஔவையார் பதில் சொல்கிறாள். வாக்கு, நல்ல மனம், லக்ஷ்மி கடாக்ஷம் இவை எல்லாம் கிடைக்கும். வாழ்க்கை சுகமாக இருக்க வேண்டியவை இவைதானே?

எல்லா தெய்வங்கள் மீதுள்ள சுலோகங்களிலும் கடைசியில் பலசுருதி இருக்கும். இந்த ஸ்லோகத்தை படித்தால் இன்ன பலன் கிடைக்கும் என்று அதில் கூறப்பட்டிருக்கும். ஆனால் விநாயகரைப் பொறுத்தவரை தொடக்கத்திலேயே பலசுருதியும் இணைந்து விடுகிறது.

அல்லல் போம் வல்வினைபோம் அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம் போம் அருணைக்
கோபுரத்தில் வீற்றிருக்கும் கணபதியைக்
கைதொழுதக்கால்

இவரது வழிபாட்டால் நமக்கு என்னென்ன கிடைத்திருக்கிறது?

அகத்தியர் கமண்டலத்தில் வந்து கவிழ்த்திராவிட்டால் நமக்கு காவிரி நீர் கிடைத்திருக்காது. விபீஷணனிடம் குட்டுப்பட்டு ரங்கநாதன் விக்கிரகத்தை தரையில் விநாயகர் வைத்திருக்காவிட்டால்

Koviloor Digital Library

திருஅரங்கமே கிடைத்திருக்காது.

சக்தியைக் கொடுத்தார். பக்திக்கு வழி வகுத்தார். ஆனால் மனிதன் பூரணத்துவம் பெற இது போதாது என்று வாழ்க்கையை வளம்பெற இதிகாசத்தை அருளினார். வேதவியாசர் சொன்ன ஐந்தாம் வேதம் எனப்படும் மகாபாரதத்தை எழுதினார். திருநாரையூரில் செல்லப் பிள்ளையாராக எழுந்தருளி நம்பியாண்டார் நம்பிக்குத் தேவாரத் திருமுறைகளைக் கண்டெடுக்க அருளினார்.

தமிழ்நாட்டுக்குக் காவிரி கிடைத்த வரலாறு

பார்வதி பரமேஸ்வரர் திருமணம் இமயமலையில் நடைபெற்றபோது வடக்கு தாழ சிவபெருமான் அகத்திய முனிவரைத் தெற்கே போகும்படி கேட்டுக் கொண்டார். அவர் தெற்கே வந்ததும் நிலம் சமமாகிவிட்டது. இவர் கமண்டலமும் தண்டமும் ஏந்தி விந்தியமலை தாண்டி வந்து கொண்டிருந்தார். மக்களது வாழ்வை வளம்பெறச் செய்ய இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள விநாயகப் பெருமான் மனதில் எண்ணினார். அகத்தியர் தன் கமண்டலத்தை பாறையின் அணைப்பில் வைத்துவிட்டு மாலை வழிபாடுகள் செய்ய அமர்ந்தார். எங்கிருந்தோ வந்தார் கணபதி. அண்டங்காக்கையாக. காகம் கமண்டலத்தை உருட்டி விட்டது. அதிலிருந்த தண்ணீர் குபுகுபு என்று பொங்கி நதியாக உருவெடுத்தது. இவ்விதம் ஸஹ்ய பர்வதத்தில் பிறந்தாள் காவிரி.

குட்டுப்பட்ட பிள்ளையார்

இராவணனிடமிருந்தும் அவன் தம்பி விபீஷணனிடம் இருந்தும் குட்டு வாங்கியிருக்கிறார் பிள்ளையார். மேற்குக் கடற்கரை ஓரத்திலுள்ள திருக்கோகர்ணம் தலத்திற்குச் சென்றால் இந்தப் பிள்ளையாரைத் தரிசிக்கலாம். இத்தலம் பரசுராம க்ஷேத்திரத்தின் வடக்கு எல்லை. இராவணன் ஆத்ம லிங்கத்தைக் கொண்டு வருகையில் ஒரு நிமிடம் அதை அங்கு தோன்றிய சிறுவன் கையில் கொடுக்க அவனும் ஒரு நிமிட நேரம் வைத்திருந்து இராவணன்

Koviloor Digital Library

வராததால் பூமியில் வைத்துவிட்டான். பூமியில் வைத்த லிங்கத்தை என்ன முயன்றும் இராவணனால் அசைக்க முடியவில்லை. வந்த கோபத்தில் இராவணன் சிறுவனாக வந்திருந்த பிள்ளையார் தலையில் ஒங்கிக் குட்டினான்.

இம்மகாபலேஸ்வரர் கோயில் மிகப் பழமையான ஆலயங்களில் ஒன்று. கோயிலுக்கு வெளியே குட்டுப்பட்ட கணபதி சந்நிதி. இந்தப் பிள்ளையாரின் தலையைத் தடவிப் பார்த்தால் இரண்டு விரல் கொள்ளும்படியான குழி இருப்பதை உணரலாம்.

மற்றுமொரு குட்டுப்பட்ட கணபதி திருச்சிராப்பள்ளிக் குன்று உச்சியில் உச்சிப் பிள்ளையார் என்ற பெயரில் கோயில் கொண்டிருக்கிறார். இலங்கையின் மன்னனான விபீஷணன் ராமர் கொடுத்த ரங்கநாத மூர்த்தியை எடுத்து வந்திருக்கிறான். இலங்கை செல்லும் வரை இம்மூர்த்தியை தரையில் வைக்கக் கூடாது என்பது நிபந்தனை. நீராட விரும்பிய விபீஷணன் அங்கு தோன்றிய சிறுவனிடம் ரங்கநாதரைக் கொடுத்து, கீழே வைக்காதே, குளித்துவிட்டு வந்து விடுகிறேன் என்று சொல்லிவிட்டுப் போயிருக்கிறான். அச்சிறுவன் எத்தனை நாழிதான் வைத்துக் கொண்டிருப்பான்? கீழே வைத்துவிட்டு விபீஷணனிடம் குட்டுப்பட்டான். அச்சிறுவன்தான் கணபதி. கீழே வைத்த இடம்தான் ஸ்ரீ ரங்கம். அர்ச்சகர் அனுமதித்தால் உச்சிப் பிள்ளையார் தலையில் குட்டு வாங்கிய குழியையும் தொட்டுப் பார்க்கலாம்.

எழுத்தாளர் தெய்வம்

எழுத்தாணி ஏந்தி ஏட்டில் எழுத ஆரம்பித்த முதல் தெய்வமே அவர்தான். வியாசர் மகாபாரதத்தை எழுத உத்தேசித்தார். ஒரு லட்சம் சுலோகம் கொண்டது இது. இதைத் தான் சொல்லிவர மகா கணபதி எழுதி வரவேண்டும் என்று அவர் பிரார்த்தித்தார். அதற்கு மகா கணபதி, நான் எழுதுகிறேன். ஆனால் நடுவில் தடங்கல் இல்லாமல் சொல்லி வரவேண்டும் என்றார்.

Koviloor Digital Library

வியாசர், 'சரி ஆனால் நான் சொல்லும் சுலோகங்களின் அர்த்தத்தை நீங்கள் தெரிந்து கொண்டு எழுத வேண்டும்' என்றார். மகா கணபதியும் ஒப்புக் கொண்டார். ஒவ்வொரு 1000 சுலோகம் ஆனதும் மிகக் கடினமான ஒரு சுலோகத்தை வியாசர் கூறினார். கணபதி அதைப் புரிந்து கொள்வதற்குள் அடுத்த ஆயிரம் சுலோகங்களை வியாசர் தன் மனதில் சிந்தித்துக்கொண்டார். இதனால் மகா கணபதியை வழிபட்டால் வித்யா சக்தி நிச்சயம் கிடைக்கும். பாதியில் எழுத்தாணி உடைந்து விடவே தன் கொம்பு ஒன்றை உடைத்து அதனால் எழுதினார். அதனால் ஏக தந்தர்.

தன் பாரதத்தில் (தமிழில்) வில்லிப்புத்தூரார் ஆரம்பத்தில் கடவுள் வாழ்த்தாகப் பாடிய செய்யுள் :

நீராழி உலகத்து மறை நூலோ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதம் சொன்ன நாள்
ஏடாக வடமேரு வெற்பாக அங்கூர் எழுத்தாணிதன்
கோடாக எழுதும் பிரானைக் குறித்தன்பு கூர்வோமரோ

விநாயகர் பாரதத்தை வியாசர் சொல்லச் சொல்ல மேருவை ஏடாகக் கொண்டு தன் தந்தத்தையே எழுத்தாணியாகக் கொண்டு எழுதினார் என்கிறது புராணம்.

திருமுறைகளைத் தேடித் தந்தவர்

அநபாய சோழன் காலத்தில் திருநாரையூர் என்னும் தலத்தில் ஆதி சைவ பிராமண குலத்தில் தோன்றியவர் நம்பியாண்டார் நம்பி. அவருடைய தந்தையார் பொல்லாப் பிள்ளையாரைப் பூஜித்து வந்தார். அவருக்குத் தக்க பருவத்தில் தந்தையார் உபநயனம் செய்வித்துப் பூஜை முதலியன செய்யும் தகுதி பெறச் செய்தார். ஒருநாள் தந்தையார் வெளியூர் சென்றதால் பிள்ளையாரைப் பூஜை செய்யும் வாய்ப்பு நம்பிக்கு ஏற்பட்டது. அவர் நிவேதனத்தைப் பிள்ளையார் முன் வைத்து உண்ணும்படி வேண்டினார். பிள்ளையார் உண்ணவில்லை. நம்பியாண்டார் நம்பி ஏதோ தவறு ஏற்பட்டுவிட்டது என்று மனம்

Koviloor Digital Library

கலங்கித் தனது தலையைக் கல்லில் மோத முற்பட்டார். அப்போது பிள்ளையார் பொறு என்று தடுத்து அவர் கொண்டு வந்த நிவேதனம் எல்லாவற்றையும் உண்டார். அது கண்ட நம்பி மனம் மகிழ்ந்தார். ஆனால் பள்ளிக்குச் சென்றால் ஆசிரியர் அடிப்பார் என்று சொல்லி வேதம் முதலிய கலைகளைப் பிள்ளையாரே ஓதி அருள வேண்டும் என்று பிரார்த்தித்தார். பிள்ளையாரும் ஓதுவித்தார். பிள்ளையார் மீது திருவிரட்டை மணிமாலை பாடினார்.

இச்செய்தி சோழன் செவிக்கு எட்டியது. அரசன் பிள்ளையாருக்கு நிவேதனம் செய்யும் பொருட்டு எல்லாவிதமான கனிகளையும் பண்டங்களையும் எடுத்துக் .கொண்டு திருநாரையூர் வந்து சேர்ந்தான். நம்பியாண்டார் நம்பி மூலம் பிள்ளையாருக்கு எல்லாவற்றையும் நிவேதனம் செய்வித்தான். பிள்ளையாரும் அவற்றைத் துதிக்கை நீட்டித் திருவமுது செய்தருளினார். அதுகண்ட சோழன் நம்பியாண்டார் நம்பியை வணங்கி சமயாசாரியர்கள் மூவர் திருவாய் மலர்ந்தருளிய தமிழ் வேதமாகிய தேவாரத் திருப்பதிகங்களை பூவுலகில் விளங்கச் செய்ய வேண்டும் என்று விண்ணப்பம் செய்தார். நம்பியாண்டார் நம்பியும் கோயிலுக்குள் சென்று பிள்ளையாரை வணங்கி, தேவாரத் திருப்பதிகங்கள் இருக்குமிடத்தைத் தனக்கு அருள் புரிதல் வேண்டுமென்று பிரார்த்தித்தார்.

பிள்ளையார் கட்டளைப்படி அரசனும் நம்பியும் தில்லையை அடைந்து தில்லைவாழ் அந்தணர்களிடம் தெரிவித்தனர். அவர்கள் தேவாரம் பாடிய மூவரும் நேரில் வந்தால்தான் அறை திறக்குமென்று கூற, அரசன் உடனே நடராஜருக்கு விசேஷ பூஜை செய்வித்து சமய குரவர் மூவர் திருவுருவங்களையும் திருவீதி உலாவாக எழுந்தருளச் செய்து கனகசபையை வலம் வந்து திருமுறைகள் இருக்கும் அறையின் எதிரே நிறுத்தி அறையைத் திறக்க வேண்டினார். அவர்கள் சோழ அரசனின் அறிவை வியந்து அறையைத் திறக்குமாறு பணித்தார்கள். கதவு திறக்கப் பெற்றதும் திருமுறைகள் பழுதுபட்டிருப்பதைக் கண்டனர். எல்லோரும் வருந்தினர். சிவபெருமான் அருளால் தேவாரத்

Koviloor Digital Library

திருப்பதிகங்கள் இக்காலத்துக்கு வேண்டுவனவற்றை வைத்து விட்டு மற்றையவற்றைச் செம்மண் மூடச் செய்தோம் என்ற அசரீரி வாக்கு எழுந்தது. அது கேட்டுச் சோழன் மனக்கவலை நீங்கி நம்பியாண்டார் நம்பியின் திருவடியை வணங்கி, தேவாரப் பாக்களை திருமுறைகளாக வகுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தான். அவரும் அப்படியே செய்தார். ஆனால் தேவாரத் திருப்பதிகங்களுக்குப் பண்முறை அறியப் பெறாமையால் திருஎருக்கத்தம்புலியூர் அடைந்து சிவபிரானை வணங்கித் தேவாரங்களுக்குப் பண்முறை அருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

அப்போதும் ஓர் அசரீரி கேட்டது. திருநீலகண்டப் பெரும்பாணர் மரபில் பிறந்த ஒரு பெண்ணுக்குப் பண்களை அருளிச் செய்தோம். அப்பெண்ணைக் கனகசபையின் முன் கொண்டு வந்து தேவாரப் பதிகங்களுக்குப் பண்முறை வகுக்கக் கடவீர் என்று கூறவும் நம்பியாண்டார் நம்பியும் சோழ அரசனும் அவ்வாறே அப்பெண்ணை சிதம்பரம் அழைத்து வந்து எல்லோர் முன்னிலையிலும் தேவாரங்களுக்குப் பண்முறை வகுக்கச் செய்தார்கள்.

பின்னர் திருநாரையூரில் நம்பியாண்டார் நம்பி சில காலம் வாழ்ந்து சிவபதம் அடைந்தார். அவர் அருளிய பிரபந்தங்களில் ஒன்று திருத்தொண்டர் திருவந்தாதி.

ஔவைக்கு அருள் செய்தவர்

தமிழ் மூதாட்டி ஔவையின் பிரத்யட்ச தெய்வம் இவர். ஒரு திருமணத்திற்கு மூவேந்தர்களையும் அழைக்க விரும்பி அவருக்கு ஓலை எழுது முன் ஔவை பிள்ளையாரை நினைத்தார். ஔவை,

ஒருகை இருமருப்பு மும்மதத்து நால்
வாய்க் கரியுரிவைக் கங்காளன் செம்மல் – கரிமுகன்
கண்ணால் ஓலை கடிதம் எழுத வாரனேல்
தனருண்மை தீர்ப்பேன் சபித்து.

எனப் பாட விநாயகரர் ஓலை எழுதிவிட்டாராம்.

Koviloor Digital Library

ஔவையார் விநாயக பூஜை செய்து கொண்டிருந்தார். அதற்குள் சுந்தர மூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமாள் நாயனாரும் கைலாயத்திற்குப் புறப்பட்டு விட்டனர். அவர்களுடன் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தால் ஔவை அவசரமாகப் பூஜை செய்தார். விநாயகர் தோன்றி, அவசரப்படாமல் பூஜை செய், நானே அவர்களுக்கு முன்பு உன்னைக் கயிலாயத்தில் சேர்ப்பிக்கிறேன் என்றார். அப்படியே செய்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் எங்களுக்கு முன் கயிலாயத்திற்கு எப்படி வந்தீர்கள் என்று கேட்க,

மதுரமொழி நல் உமையாள் சிறுவன் மலரடியை
முதிர நினைய வல்லார்க்கு அரிதோ முகில் போல் முழங்கி
அதிரவருகின்ற யானையும் தேரும் அதன் பின்சென்ற
குதிரையும் காதம் கிழவியும் காதங்குலம் மன்னனே

என்று பதிலளித்ததாக அபிதான சிந்தாமணி கூறுகிறது.

பிள்ளையார் பிள்ளைத்தமிழ்

வழிபடும் தெய்வத்தை குழந்தையாகப் பாவித்து பக்தி செலுத்துவது பக்தி நெறியில் ஒருவகை. பிள்ளைத்தமிழ் என்ற பிரபந்தம் இந்த வகையில் ஏற்பட்டதுதான். இப்பிள்ளைத்தமிழில் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் என்பதும் ஒன்று.

மறைநெறி ஒழுகுனர் தங்களை ஆளமதித்த மறைப்பொருளே
வளிவெளி சலம் நிலம் அங்கி யெலாம் உருவத்து நிறுத்தவனே
நிருமல அறிவினர் சிந்தை நிலவிய நிர்குண அற்புதனே
அறைகொடு உலகொடு பங்கயன் மாலை அளித்து வளர்த்தவனே
அவரவர் பெறவுறு பந்தமும் வீடும் அமைத்த அறக்கடலே
முறைவளர் கலசை கொள் செங்கழுநீர் இறை முத்தம் அளித்தருளே

உருகும் அடியார் அள்ளுற உள்ளே
ஊறும் தேனே வருக
உண்ணத் தெவிட்டாச் சிவானந்த
ஒளியே வருக புலன் வழிபோய்

Koviloor Digital Library

திருகும் உள்ளத்தார் நினைவினுக்கு சேயோய் வருக
எமை ஆண்ட செல்வா வருக இணைவிழியால்
பருகும் அமுதே வருக உயிர்ப் பைங்கூழ்
தழைக்கக் கருணை மழை
பரப்பும் முகிலே வருக நறும்பாகே
வருக வரை இழித்த
முருகவேட்கு முன் உதித்த
முதல்வா வருக வருகவே

என்று அழைக்கிறார் இப்பாட்டின் ஆசிரியர்.

திருமுறைகளில் கற்பகம்

முதல் திருமுறை

திருச்செங்காட்டங்குடி **பண் : பழந்தக்கராகம்**

நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாடோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையும் செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான் **கணபதீச் சரத்தானே.**

பாலினால் நறுநெய்யாற் பழத்தினால் பயின்றாட்டி
நூலினால் மணமாலை கொணர்ந்தடியார் புரிந்தேத்தச்
சேலினார் வயல்புடைசூழ் செங்காட்டங் குடியதனுள்
காலினால் கூற்றுதைத்தான் **கணபதீச் சரத்தானே.**

கறையிலங்கு மலர்க்குவளை கண்காட்டக் கடிபொழிலின்
நறையிலங்கு வயற்காழித் தமிழ்ஞான சம்பந்தன்
சிறையிலங்கு புனற்படப்பைச் செங்காட்டங் குடிசேர்த்தும்
மறையிலங்கு தமிழ்வல்லார் வானுலகத் திருப்பாரே.

குறிப்பு :கஜமுகாசுரனைக் கொன்ற பழி நீங்க விநாயகர் சிவபெருமானை வழிபட்ட தலம். ஆலயத்தின் பெயர் கணபதீச்சரம். அடியார் பணி முட்டின்றி நிறைவேறப் பாடியது.

Koviloor Digital Library

திருவலிவலம் பண் : வியாழக்குறிஞ்சி

பூவியல் புரிகுழல் வரிசிலை நிகர்நுதல்
ஏவியல் கணைபிணை யெதிர்விழி உமையவள்
மேவிய திருவுரு வுடையவன் விரைமலர்
மாவியல் பொழில்வலி வலமுறை இறையே.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

மன்னிய வலிவல நகருறை இறைவனை
இன்னியல் கழுமல நகரிறை யெழின்மறை
தன்னியல் கலைவல தமிழ்விர கனதுரை
உன்னிய வொருபது முயர்பொருள் தருமே.

குறிப்பு : வழிபடும் அடியார் இடர்நீங்க, விநாயகரைத் தந்தது.

*****

திருக்கழுமலம் பண் : வியாழக்குறிஞ்சி

பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின்றவும் பரப்
பாலேசேர்வா யேனோர்கான் பயில்கண முநிவர்களும்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின்மங்கை தன்னொடுஞ்
சேர்வார்நாள்நாள் நீள்கயிலைத் திகழ்தரு பரிசதெலாம்
சந்தித்தே இந்தப்பார் சனங்கள் நின்று தங்கணால்
தாமேகாணா வாழ்வாரத் தகவுசெய் தவனதிடங்
கந்தத்தா லெண்திக்கும் கமழ்ந்திலங்கு சந்தனக்
காடார்பூவார் சீர்மேவும் கழுமல வளநகரே.


செற்றிட்டே வெற்றிச்சேர் திகழ்ந்ததும்பி மொய்ம்புறும்
சேரேவாரா நீளகோதைத் தெரியிழை பிடியதுவாய்

Koviloor Digital Library

ஒற்றைச்சேர் முற்றற்கொம் புடைத்தடக்கை முக்கண்மிக்(கு)
ஒவாதேபாய் மாதானத் துறுபுகர் முகவிறையைப்
பெற்றிட்டே மற்றிப்பார் பெருத்துமிக்க துக்கமும்
பேராநோய்தா மேயாமைப் பிரிவுசெய்த வனதிடம்
கற்றிட்டே யெட்டெட்டுக் கலைத்துறைக் கரைச்செலக்
காணாதாரே சேராமெய்க் கழுமல வளநகரே.

கஞ்சத்தே னுண்டிட்டே களித்துவண்டு சண்பகக்
கானேதேனே போராருங்கழுமல நகரிறையைத்
தஞ்சைச்சார் சண்பைக்கோன் சமைத்தநற் கலைத்துறை
தாமேபோல்வார் தேனேரார் தமிழ்விர கனமொழிகள்
எஞ்சத்தேய் வின்றிக்கே யிமைத்திசைத்த மைத்தகொண்
டேழேயேழே நாலேமூன் றியலிசை யியல்பா
வஞ்சத்தேய் வின்றிக்கே மனங்கொளப் பயிற்றுவோர்
மார்பேசேர்வாள் வானோர்சீர் மதிநுதன் மடவரலே.

குறிப்பு: இப்பாரினில் பெருந்துக்கம் நீங்க புகர் முக இறையைப் பெற்றது.



இரண்டாம் திருமுறை

திருக்கடிக்குளம் **பண் : நட்டராகம்**

பொடிகொள் மேனிவெண் ணூலினர் தோலினர் புலியுரி யதளதாடை
கொடிகொள் ஏற்றினர் மணிகிணி னெனவருகுரைகழல் சிலம்பார்க்கக்
கடிகொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத் துறையுங்கற் பகத்தைத்தம்
முடிகள் சாய்த்தடி வீழ்தரும் அடியரை முன்வினை மூடாவே.

விண்க ளார்தொழும் விளக்கினைத் துளக்கிலா விகிர்தனை விழவாரும்
மண்க ளார்துதித் தன்பரா யின்புறும் வள்ளலை மருவித்தம்
கண்க ளார்தரக் கண்டுநங் கடிக்குளத் துறைதரு கற்பகத்தைப்
பண்க ளார்தரப் பாடுவார் கேடிலர் பழியிலர் புகழாமே.

Koviloor Digital Library

பொங்கு நற்கரி யுரியது போர்ப்பது புலியதள் அழல்நாகம்
தங்க மங்கையைப் பாகமு துடையவர் தழல்புரை திருமேனிக்
கங்கை சேர்தரு சடையினர் கடிக்குளத் துறைதரு கற்பகத்தை
எங்கு மேத்திநின் றின்புறு மடியரை யிடும்பவந் தடையாவே.

நீர்கொள் நீள்சடைமுடியனை நித்திலத் தொத்தினை நிகரில்லாப்
பார்கொள் பாரிடத் தேவர்தொழும் பவளத்தைப் பசும்பொனை விசும்பாரும்
கார்கொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத் துறையுங்கற் பகந்தன்னைச்
சீர்கொள் செல்வங்க ளேத்தவல் லார்வினை தேய்வது திணமாமே

சுரும்பு சேர்சடை முடியினன் மதியொடு துன்னிய தழல்நாகம்
அரும்பு தாதவிழ்ந் தலர்ந்தன மலர்பல கொண்டடி யவர்போற்றக்
கரும்பு கார்மலி கொடிமிடை கடிக்குளத் துறைதரு கற்பகத்தை
விரும்பு வேட்கையோ டுளமகிழ்ந் துரைப்பவர் விதியுடை யவர்தாமே.

மாதி லங்கிய பாகத்தன் மதியமொ டலைபுனல் அழல்நாகம்
போதி லங்கிய கொன்றையு மத்தமும் புரிசடைக் கழகாகக்
காதி லங்கிய குழையின் கடிக்குளத் துறைதரு கற்பகத்தின்
பாதங் கைதொழு தேத்தவல் லார்வினை பற்றறக் கெடுமன்றே.

குலவு கோலத்த கொடிநெடு மாடங்கள் குழாம்பல குளிர்பொய்கை
உலவு புள்ளினம் அன்னங்க ளாலிடும் பூவைசே ருங்கூந்தல்
கலவை சேர்தரு கண்ணியன் கடிக்குளத் துறையுங்கற்பகத்தைச் சீர்
நிலவி நின்றுநின் றேத்துவார் மேல்வினை நிற்ககில் லாதானே.

மடுத்த வாளரக் கன்னவன் மலைதன்மேன் மதியிலா மையிலோடி
எடுத்த லும்முடி தோள்கர நெரிந்திற இறையவன் விரலூன்றக்
கடுத்து வாயொடு கையெடுத் தலறிடக் கடிக்குளந் தனின்மேவிக்
கொடுத்த பேரருட் கூத்தனை யேத்துவார் குணமுடை யவர்தாமே.

நீரினார்கடற் றுயின்றவ னயனொடு நிகழடி முடிகாணார்
பாரி னார்விசும் புறப்பரந் தெழுந்ததோர் பவளத்தின் படியாகிக்
காரி னார்பொழில் சூழ்தரு கடிக்குளத் துறையுங்கற் பகத்தின்றன்
சீரினார் கழலேத்த வல்லார்களைத் தீவினை அடையாவே.

Koviloor Digital Library

குண்டர் தம்மொடு சாக்கியர் சமணருங் குறியினி னெறி நில்லா
மிண்டர் மிண்டுரை கேட்டவை மெய்யெனக் கொள்ளன்மின் விடமுண்ட
கண்டர் முண்டநன் மேனியர் கடிக்குளத் துறைதரு மெம்மீசர்
தொண்டர் தொண்டரைத் தொழுதடி பணிமின்கள் தூநெறி யெளிதாமே.

தனமலி புகழ் தயங்கு பூந்தராயவர் மன்னனற் சம்பந்தன்
மனமலி புகல்வண் டமிழ்மா லைகள் மாலதாய் மகிழ்வோடும்
கனம லிகட லோதம்வந் துலவிய கடிக்குளத் தமர்வானை
இனம லிந்திசை பாடவல் லார்கள்போ யிறைவனோ டுறைவாரே.

குறிப்பு : கற்பகப் பிள்ளையார் சிவபெருமானைப் பூசித்து மாம்பழம் பெற்ற தலம். கோயிலுக்கு வெளியே தென்மேற்கில் கற்பகப் பிள்ளையார் இருக்கிறார். கோயிலுக்கு வடகிழக்கே விநாயக தீர்த்தம் இருக்கிறது. கற்பகப் பிள்ளையார் பூசித்தமையால் இங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானும் 'கற்பகேசுரர்' என்று பேர் பெற்றார்.



திருவலஞ்சுழி

பண் : நட்டபாடை

என்னபுண்ணியஞ் செய்தனைநெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னநீ புரி நல்வினைப் பயனிடை முழுமணிதரளங்கள்
மன்னுகாவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னியாதரித் தேத்தியும் பாடியும் வழிபடுமதனாலே.

விண்டொழிந்தன நம்முடைவல்வினை விரிகடல்வரு நஞ்சம்
உண்டிறைஞ்சுவா னவர்தமைத் தாங்கிய இறைவனையுலகத்தில்
வண்டுவாழ்குழல் மங்கையொர்பங்கனை வலஞ்சுழியிடமாகக்
கொண்டநாதன் மெய்த்தொழில்புரி தொண்டரோடு இனிதிருந்தமையாலே.

மாதொர் கூறனை வலஞ்சுழிமருவிய மருந்தினை வயற்காழி
நாதன்வேதியன் ஞானசம்பந்தன்வாய் நவிற்றிய தமிழ்மாலை
ஆதரித்திசை கற்றுவல்லார்சொலக் கேட்டுகந்தவர் தம்மை
வாதியாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம் வந்தடையாவே.

Koviloor Digital Library

குறிப்பு : இத்தலத்து விநாயகரை பூசித்ததால் அமுதம் திரண்டது. தேவேந்திரனால் பூசிக்கப்பட்ட இந்த வெள்ளை விநாயகர் அவன் இத்தலத்திற்கு வந்ததும் இங்கேயே நின்று விட்டார். இக்கோயிலில் பிரம்மோற்சவம் இவருக்குத் தான் நடைபெறுகிறது. தீண்டாத் திருமேனி. இங்குள்ள மூலத்தான சிவபெருமான் 'கற்பக நாதேசுரர்'. பிலத்தில் சென்றுவிட்ட காவிரி ஏரண்ட முனிவர் தம்மைப் பலி கொடுத்தபின் அது மேலே வந்து வலஞ்சுழித்துக் கொண்டு சென்ற காரணத்தால் ஊருக்கு வலஞ்சுழி என்ற பெயர்.

*****

மூன்றாம் திருமுறை

திருவீழிமிழலை பண் : புறநீர்மை

புள்ளித்தோ லாடைபூண்பது நாகம்
பூசுசாந் தம்பொடி நீறு
கொள்ளித்தீ விளக்குக் கூளிகள் கூட்டம்
காளியைக் குணஞ்செய்கூத் துடையோன்
அள்ளற்கா ராமை யகடுவான் மதியம்
ஏய்க்கமுள் தாழைக ளானை
வெள்ளைக் கொம்பீனும் விரிபொழில் வீழி
மிழலையா னெனவினை கெடுமே.

கடுத்தவா ளரக்கன் கைலையன் றெடுத்த
கரமுரஞ் சிரநெரிந் தலற
அடர்த்ததோர் விரலா லஞ்செழுத் துரைக்க
அருளினர் தடமிகு நெடுவாள்
படித்தநால் மறைகேட் டிருந்தபைங் கிளிகள்
பதங்களை யோதப்பா டிருந்த
விடைக்குலம் பயிற்றும் விரிபொழில் வீழி
மிழலைய னெனவினை கெடுமே.

Koviloor Digital Library

வேந்தர்வந் திறைஞ்ச வேதியர் வீழி
மிழலையுள் விண்ணிழி விமானத்து
ஏய்ந்ததன் தேவியோடுறை கின்ற
ஈசனை யெம்பெரு மானைத்
தோய்ந்தநீர்த் தோணி புரத்துறை மறையோன்
தூமொழி ஞானசம் பந்தன்
வாய்ந்தபா மாலை வாய்நவில் வாரை
வானவர் வழிபடு வாரே.

— திருஞானசம்பந்தர்

குறிப்பு : திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்கும் திருநாவுக்கரசு சுவாமிகளுக்கும் இறைவன் படிக்காசு அளித்த இத்தலத்துக் கோயிலில் மேற்கே இருக்கும் பலிபீடத்தருகே 'படிக்காசுப் பிள்ளையாரும்' அவர்பக்கலில் சம்பந்த சுவாமியும் நாவுக்கரசும் இருக்கிறார்கள்.

*****

நான்காம் திருமுறை

திருவதிகை வீரட்டானம் **பண் : காந்தாரம்**

பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே
கலமலக்கிட்டுத் திரியுங் கணபதி யென்னும் களிறும்
வலமேந் திரண்டு சுடரும் வான்கயி லாய மலையும்
நலமார் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்.
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.

குறிப்பு : அட்ட வீரட்டங்களில் திரிபுர தகனம் செய்த தலம். திருநாவுக்கரசு சுவாமிகளின் சூலைநோய் தீரப்பெற்ற திருநகர். சமணர்கள் ஏவிய யானை தீயமனத்தினரைக் கொல்லுமே தவிர தூய மனத்தினரை ஒன்றும் செய்யாது என ஓதி அருளியது.

*****

Koviloor Digital Library

ஐந்தாம் திருமுறை

திருப்பூவனூர் **திருக்குறுந்தொகை**

பூவனூர்ப் புனிதன் திரு நாமந்தான்
நாவில் நூறுநூ றாயிரம் நண்ணினார்
பாவ மாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்க ளாவரே.

அனுச யப்பட் டதுஇது என்னாதே
கனிம னத்தொடு கண்களும் நீர்மல்கிப்
புனித னைப்பூவ னூரனைப் போற்றுவார்
மனித ரில்தலை யான மனிதரே.

நார ணன்னொடு நான்முகன் இந்திரன்
வார ணன்கும ரன்வணங் குங்கழற்
பூர ணன்திருப் பூவனூர் மேவிய
கார ணன்னெனை யாளுடைக் காளையே.

குறிப்பு : மூன்றாம் பாடலில் விநாயகர் சிவனைப் பூசித்தது கூறப்படுகிறது.

*****

ஆறாம் திருமுறை

திருப்புறம்பயம் **திருத்தாண்டகம்**

கோவாய இந்திரனுள் ளிட்டா ராகக்
குமரனும் விக்கின விநாய கனும்
பூவாய பீடத்து மேல யனும்
பூமி யளந் தானும் போற்றி சைப்ப,
பாவாய இன்னிசைகள் பாடி யாடிப்
பாரிடமுந் தாமும் பரந்து பற்றிப்,

Koviloor Digital Library

பூவார்ந்த கொன்றை பொறிவண் டார்க்கப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே.

குறிப்பு : "பிரளயங் காத்த விநாயகர்" வெண்மை நிறம். விநாயக சதுர்த்தியன்று ஒரு ஆடம் (சுமார் 20 லி) தேன் அபிஷேகம் செய்யப்படுகின்றது. மற்றை நாட்களில் அபிஷேகம் கிடையாது.

*****

திருவீழிமிழலை

கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலுங்
கயா சுரனை யவனாற்கொல் வித்தார் போலும்,
செய்வேள்வித் தக்கனைமுன் சிதைத்தார் போலும்
திசைமுகன்றன் சிரமொன்று சிதைத்தார் போலும்
மெய்வேள்வி மூர்த்திதலை யறுத்தார் போலும்
வியன்வீழி மிழலையிடங் கொண்டார்போலும்
ஐவேள்வி ஆறங்க மானார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே.

திருஏகம்பம்

முந்தைகாண் மூவரினும் முதலா னான்காண்
மூவிலைவேல் மூர்த்திகாண் முருகவேட்குத்
தந்தைகாண் தண் கடமா முகத்தி னாற்குத்
தாதைகாண் தாழ்ந்தடியே வணங்கு வார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச்
சிவனவன் காண் செங்கண்மால் விடையொன் றேறும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண் அவனென் எண்ணத் தானே.

திருநாரையூர்

தக்கனது வேள்விகெடச் சாடி னானைத்
தலைகலனாப் பலியேற்ற தலைவன் தன்னைக்

Koviloor Digital Library

கொக்கரைசச் சரிவீணை பாணி யானைக்
கோணாகம் பூணாகக் கொண்டான் தன்னை
அக்கினொடும் என்பணிந்த அழகன் தன்னை
அறுமுகனோடு ஆனைமுகற் கப்பன் தன்னை
நக்கனைவக் கரையானை நள்ளாற் றானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே.

குறிப்பு : தில்லையில் சேமித்து வைத்திருந்த திருமுறைகளை நம்பியாண்டார் நம்பிகள் மூலமாக வெளிப்படுத்தியருளிய பொல்லாப் பிள்ளையார் எழுந்தருளி இருக்கும் தலம்.

*****

திருவாய்மூர்

பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்
போற்றிசைத்து விண்ணோர் புகழக் கண்டேன்
பரிந்தார்க் கருளும் பரிசுங் கண்டேன்
பாராகிப் புனலாகி நிற்கை கண்டேன்
விருந்தாய்ப் பரந்த தொகுதி கண்டேன்
மெல்லியலும் விநாயகனும் தோன்றக் கண்டேன்
மருந்தாய்ப் பிணிதீர்க்கு மாறு கண்டேன்
வாய்மூர டிகளை நான் கண்டவாறே.

— திருநாவுக்கரசர்

குறிப்பு : விநாயகர் அப்பர் சுவாமிகளுக்குத் தரிசனம் தந்தது.

*****

ஏழாந்திருமுறை

திருஓணகாந்தன் தளி — பண் : இந்தளம்

நெய்யும்பாலுந் தயிரும் கொண்டு நித்தல்பூசனை செய்யலுற்றார்
கையிலொன்றுங் காணம்இல்லைக் கழலடிதொழு துய்யினல்லால்

Koviloor Digital Library

ஐவர்கொண்டிங் காட்டவாடி ஆழ்குழிப்பட் டழுந்துவேனுக்(கு)
உய்யுமாறொன் றருளிச்செய்யீர் ஓணகாந்தன் தளியுளீரே.

திங்கள் தங்கு சடையின்மேலோர் திரைகள்வந்து புரளவீசும்
கங்கையாளேல் வாய்திறவாள் கணபதியேல் வயிறுதாரி
அங்கைவேலோன் குமரன்பிள்ளை தேவியார்கோற் றட்டியாளால்
உங்களுக்காட் செய்யமாட்டோம் ஓணகாந்தன் தளியுளீரே.

ஒவணமேல் எருதொன்றேறும் ஓணகாந்தன் தளியுளார்தாம்
ஆவணம்செய் தாளுங்கொண்டு அரைதுகிலோடு பட்டுவீக்கிக்
கோவணமேற் கொண்டவேடங் கோவையாகஆ ரூரன்சொன்ன
பாவணத்தமிழ் பத்தும் வல்லார் பறையும்தாஞ்செய்த பாவந்தானே.

குறிப்பு : ஓணன், காந்தன் என்னும் இரு அசுரர்கள் பூசித்த தலம். இரண்டாவது பாடல் விநாயகரைக் குறித்து நிந்தாஸ்துதியாகப் பாடியருளியது.

*****

திருஆரூரில் பாடியது பண் : நட்டராகம்

பொன்செய்த மேனியினீர் புலித்தோலை அரைக்கசைத்தீர்
முன்செய்த மூவெயிலும் எரித் தீர்முது குன்றமர்ந்தீர்
மின்செய்த நுண்ணிடையாள் பரவையிவள் தன்முகப்பே
என்செய்த வாறடிகேள் அடி யேன்இட் டளங்கெடவே.

பத்தா பத்தர்களுக் கருள்செய்யும் பரம்பரனே
முத்தா முக்கணனே முது குன்றம் அமர்ந்தவனே
மைத்தா ருந்தடங்கண் பர வைஇவள் வாடாமே
அத்தா தந்தருளாய் அடி யேன்இட் டளங்கெடவே.

ஏத்தா திருந்தறியேன் இமையோர்தன் நாயகனே
மூத்தாய் உலகுக்கெல்லாம் முதுகுன்றம் அமர்ந்தவனே
பூத்தா ருங்குழலாள் பரவைஇவள் தன்முகப்பே
கூத்தா தந்தருளாய் கொடியேன்இட் டளங்கெடவே.

Koviloor Digital Library

பிறையா ருஞ்சடையெம் பெருமானரு ளாயென்று
முறையால் வந்தமரர் வணங்கும்முது குன்றர்தம்மை
மறையார் தங்குரிசில் வயல்நாவலா ரூரன்சொன்ன
இறையார் பாடல்வல்லார்க் கெளிதாம்சிவ லோகமதே.

குறிப்பு : சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமுதுகுன்றில் பெற்ற பொன்னை ஆற்றிலிட்டு பின் ஆரூர் சேர்ந்து கமலாலயத்தில் இறங்கிப் பொன்னை எடுத்து அது மாற்றுக் குறைந்திருந்தது கண்டு மறுபடியும் பெருமானைப் பாடி மாற்றுக்குறையாமல் பெற்ற தலம். விநாயகர் நடுவராக இருந்து மாற்றுரைத்துக் காட்டியபடியால் மாற்றுரைத்த பிள்ளையார் என்று குளக்கரையில் வீற்றிருக்கிறார்.

*****

திருஆரூரில் பாடியது பண் : நட்டராகம்

பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடிப்
  பாவையரைக் கிறிபேசிப் படிறாடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்
  செல்வத்தை மறைத்துவைத்தீ ரெனக்கொருநா ளிரங்கீர்
முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக் கோவை
  அவைபூணத் தந்தருளி மெய்க்கினிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டுங்
  கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே.

மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே ஆட்சி
  மலையரையன் பொற்பாவை சிறுவனையுந் தேறேன்
எண்ணிலியுண் பெருவயிறன் கணபதிஒன் றறியான்
  எம்பெருமா னிதுதகவோ இயம்பியருள் செய்யீர்
திண்ணெனஎன உடல்விருத்தி தாரீரே ஆகில்
  திருமேனி வருந்தவே வளைக்கின்றே னாளைக்
கண்ணறையன் கொடும்பாட னென்றுரைக்க வேண்டா
  கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே.

Koviloor Digital Library

பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானே மற்றாரை யுடையேன்
உண்மயத்த உமக்கடியேன் குறைதீர்க்க வேண்டும்
ஒளிமுத்தம் பூணாரம் ஒண்பட்டும் பூவும்
கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டுங்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரென்(று)
அண்மயத்தா லணிநாவ லாரூரன் சொன்ன
அருந்தமிழ்க ளிவைவல்லா ரமருலகாள் பவரே.

குறிப்பு : இத்தலத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமானை வேண்டிப் பொன், ஆடை, ஆபரணம் முதலிய பொருள்களைப் பெற்றார். "கணபதி ஒன்றறியான்" என்று இவர் பாடியது விநாயக மூர்த்தியின் எளிவந்த தன்மையைக் குறிக்கிறது.



திருவையாறு பண் : காந்தாரபஞ்சமம்

பரவும் பரிசொன் றறியேன்நான் பண்டே யும்மைப் பயிலாதேன்
இரவும் பகலும் நினைந்தாரும் எய்த நினைய மாட்டேன்நான்
கரவில் அருவி கமுகுண்ணத் தெங்கங் குலைக்கீழ்க் கருப்பாலை
அரவந் திரைக்கா விரிக்கோட்டத்தையா றுடைய அடிகளோ.

பிழைத்த பிழைஒன் றறியேன்நான் பிழையைத் தீரப் பணியாயே
மழைக்கண் நல்லார் குடைந்தாட மலையும் நிலனுங் கொள்ளாமைக்
கழைக்கொள் பிரசங் கலந்தெங்குங் கழனி மண்டிக் கையேறி
அழைக்குந் திரைக்கா விரிக்கோட்டத் தையாறுடைய அடிகளோ.

கூடி அடியார் இருந்தாலுங் குணம்ஒன் றில்லீர் குறிப்பில்லீர்
ஊடி இருந்தும் உணர்கிலேன் உம்மைத் தொண்டன் ஊரனேன்

Koviloor Digital Library

தேடி எங்கும் காண்கிலேன் திருவாரூரே சிந்திப்பன்
ஆடுந் திரைக்கா வரிக்கோட்டத் தையாறுடைய அடிகளோ.

– சுந்தரமூர்த்தி நாயனார்.

குறிப்பு : அப்பர் சுவாமிகளுக்கு கயிலைக் காட்சி அளித்த தலம். தல விநாயகர் "ஆதி விநாயகர்" எனப்படுவர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் வெள்ள மிகுந்திருந்த காவிரியைக் கடக்கக் தென் கரையிலிருந்து "ஐயாறுடைய அடிகளோ" என்றழைத்துப் பாடியபோது இவ்விநாயகர் "ஓலம் ஓலம்" என்று சொன்னாராம்.

*****

எட்டாம் திருமுறை

திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்டமுழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய், யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே.

திருக்கோவையார்

காரணி **கற்பகம் கற்றவர்நற்றுணை** பாணர் ஒக்கல்
சீரணி சிந்தா மணியணி தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் **தக்கோர் தம்சங்க நிதி** விதிசேர்
ஊருணி உற்றவர்க்கு ஊரன் மற்றியாவர்க்கும் ஊதியமே.

– மாணிக்கவாசகர்

ஒன்பதாம் திருமுறை

தனதன் நற் றோழா! சங்கரா! சூலபாணியே! தாணுவே! சிவனே!
கனகநற் றூணே! **கற்பகக் கொழுந்தே!** கண்கள்மூன் றுடை யதோர்
கரும்பே!

Koviloor Digital Library

அனகனே! குமர விநாயக சனக! அம்பலத் தமரசே கரனே!
உனகழல் இணையென் நெஞ்சினுள் இனிதாத் தொண்டனேன்
நுகருமா நுகரே!

– திருமாளிகைத் தேவர்

திருப்பல்லாண்டு

புரந்தரன் மால்அயன் பூசலிட்டு ஒலமிட் டின்னம் புகலரிதாய்
இரந்திரந் தழைப்ப என்னு யிராண்ட கோவினுக் கென்செய
வல்லமென்றும்
கரந்துங் கரவாத கற்பகனாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே.

– சேந்தனார்

பத்தாம் திருமுறை

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.! – திருமூலர்.

பதினோராம் திருமுறை

திருவாக்கும் செய்கருமம் கைக்கூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

– கபிலதேவ நாயனார்

Koviloor Digital Library

மொழியின் மறைமுதலே முந்நயனத் தேறே
கழிய வருபொருளே கண்ணே – தெழிய
கலாலயனே எங்கள் கணபதியே நின்னை
அலாதையனே சூழாதென் அன்பு. – அதிரா அடிகள்

என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் – புன்னை
விரசு மகிழ் சோலை வியன்நாரை யூர்முக்கண்
அரசுமகிழ் அத்திமுகத் தான்.

மருப்பைஒரு கைக்கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பை அடி போற்றத் துணிந்தால் – நெருப்பை
அருந்தஎண்ணு கின்றஎறும் பன்றே அவரை
வருந்தஎண்ணு கின்ற மலம்.

நாரணன் முன்பணிந் தேத்தநின் றெல்லை நடாவியவத்
தேரண வுந்திரு நாரையூர் மன்னு சிவன்மகனே
காரண னேஎம் கணபதியே நற் கரிவதனா
ஆரண நுண்பொரு ளேஎன் பவர்க்கில்லை அல்லல்களே.

– நம்பியாண்டார் நம்பி

பன்னிரண்டாம் திருமுறை

எடுக்கும் மாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம். – சேக்கிழார்.



Koviloor Digital Library

உழவாரம்

சமய இலக்கியத் திங்கள் இதழ்

புரவலர் கட்டணம்	ரூ.	1000-/-
ஆயுள் சந்தா	ரூ.	500/-
ஆண்டு சந்தா	ரூ.	50/-

முகவரி :

பதிப்பாளர்
உழவாரம்
B.40, சுந்தரர் தெரு, திருநகர்,
மதுரை 6. Ph : 55 34 601

ஞானப்பேழை

இரண்டு பகுதிகள் - 500 பக்கங்கள் அரிய தகவல் களஞ்சியம் - 275 தலைப்புகளில் பலநூறு செய்திகள் தொகுக்கப் பெற்றுள்ளன. ரூ. 150 M.O. அனுப்பிடின் கூரியர் மூலம் அனுப்பப் பெறும்

M.O. அனுப்பவேண்டிய முகவரி :

அபிராமி அச்சகம்
B-40, சுந்தரர் தெரு, திருநகர்,
மதுரை - 625 006.

Koviloor Digital Library

சிடர் குழுவின் பணிகள்

1. தமிழகத்திலுள்ள சைவ ஆதீன மடாலயங்களின் ஆதி முதல்வர் குருபூசையன்று திருமடாலயங்களுக்குச் சென்று மகா சந்நிதானத்திற்கு பாத காணிக்கை செலுத்தி ஆசி பெற்று வருவது.

2. மகா சந்நிதானங்கள் மதுரைக்கு எழுந்தருளும் போது, அவர்களை தக்க மரியாதையுடன் வரவேற்று நகர் வலம் வருவது மற்றும் சைவஅன்பர்கள் ஆசி பெற உதவுவது.

3. சைவ ஆதீனங்களுக்கும், சைவ சமுதாய அன்பர்களுக்கும் இடைவெளி இல்லாமல் பாலமாகச் செயல்படுவது.

4. சைவத் திருமுறைப் பாராயணம் ஓதுவது, ஓதுபவர்களை ஊக்குவிப்பது.

5. திருமுறை மற்றும் பக்திப் பாடல்களை இலவசமாக வெளியிடுவது ஆகியன.


KOVILOOR ANDAVAR LIBRARY KOVILOOR
A. No. 12774